**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.141/2003**
**நாள்.27.03.2026**
**வா.சா.1 - காளிமுத்து**

**இடை மனு எண். 10/2026 நாள் 26.03.2026ம் தேதியில் ஏற்பட்ட உத்தரவின்பேரில் வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி-**

நான் இந்த வழக்கின் 3ம் வாதி. நான் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன்.

| **வரிசை எண்** | **தேதி** | **ஆவண விபரம்** | **தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | --- | வேடசந்தூர் சப் கோர்டு அசல் வழக்கு எண்.188/2018 வழக்கில் 12ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் | சார்பு நகல் |
| வா.சா.ஆ.6 | 30.05.2018 | வேடசந்தூர் சப் கோர்டு அசல் வழக்கு எண்.188/2018 வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பு | சான்று நகல் |
| வா.சா.ஆ.7 | 13.04.2018 | மேற்படி வழக்கிற்கு முன்பு வாதிகள் தரப்பில் தினத்தந்தி நாளிதழில் கொடுக்கப்பட்ட பொது அறிவிப்பு | அசல் |
| வா.சா.ஆ.8 | --- | வேடசந்தூர் சப் கோர்ட்டு அசல் வழக்கு எண்.188/2018 வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள திருமண பத்திரிக்கை | சான்று நகல் |

**(கற்றறிந்த 12ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வா.சா.ஆ.5 ஆவணமானது சம்பந்தப்பட்ட 12ம் பிரதிவாதி உயிருடன் இருப்பதால் வேறு வழக்கில் அவரது தரப்பில் தாக்கல்**

செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தை இந்திய சாட்சிய சட்டப்படி குறியீடு செய்யமுடியாது என்றும், வா.சா.ஆ.8 ஆவணமானது மேற்படி திருமண பத்திரிக்கையில் உள்ள மணமக்களையோ அல்லது அவர்களின் பெற்றோர்களையோ விசாரித்து குறியீடு செய்ய வேண்டும் என்பதாலும், 3ம் தரப்பினர் மூலம் குறியீடு செய்யமுடியாது என்பதாலும் வா.சா.ஆ.8 யை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்தார். மேற்கண்ட ஆட்சேபணைகள் வழக்கு தீர்ப்புரையின்போது தீர்மானிக்கப்படும்.)

வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**